WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-32

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

01-07-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 32 :01-07-2026

தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

இப்போது 'செய்யுள் ஒழிபு' பற்றி நோக்குவோம். செய்யுளுக்குரிய சொல், செய்யுள் விகாரம், பொருள் கோள், வழக்கு முதலாயின செய்யுள் ஒழிபிலடங்குவன.

1

'அடுக்கி வரும் சொல்'

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 32 :01-07-2026
தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

1 'அடுக்கி வரும் சொல்'

**"இசைநிறை அசைநிலை பொருளோடு புணர்த லென்று
அவைமூன் றென்ப ஒருசொல் லடுக்கே" (411)**

இ-ள்:

இசை நிறையும், அசை நிலையும், பொருள் வேறுபாட்டோடு புணர்வதுமென ஒரு சொல்லடுக்கு மூவகையாம்.

1. **இசை நிறையடுக்கு**
2. **அசைநிலையடுக்கு**
3. **பொருளொடு புணரடுக்கு**

எ-டு:

ஏ ஏ ஏ ஏ , ஓ ஓ ஓ ஓ, ஆ ஆ ஆ ஆ - இசைநிறையடுக்கு
மற்றோ மற்றோ, அன்றே அன்றே - அசைநிலையடுக்கு
பாம்பு பாம்பு, போம் போம்,
உண்டு உண்டு - பொருளொடு புணரடுக்கு.

அடுக்குத் தொடரைப் பிரித்தால் தனிச்சொல் பொருள் தரும். இரட்டைக் கிளவி பொருள் தரா. 4 தடவைகளுக்கு மேல் அடுக்கக் கூடாது.

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 32 :01-07-2026
தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

மதுரகிரித் திருப்புகழ்:

வந்து வந்துவித் தூறி யென்றனுடல்
வெந்து வெந்துவிட் டோட நொந்துயிரும்
வஞ்சி னங்களிற் காடு கொண்டவடி ..... வங்களாலே

மங்கி மங்கிவிட் டேனை யுன்றனது
சிந்தை சந்தொஷித் தாளு கொண்டருள
வந்து சிந்துரத் தேறி யண்டரொடு ..... தொண்டர்சூழ

எந்தன் வஞ்சனைக் காடு சிந்திவிழ
சந்த ரண்டிசைத் தேவ ரம்பையர்க
னிந்து பந்தடித் தாடல் கொண்டுவர ..... மந்திமேவும்

திருவிசைப்பாவும்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

"கற்றவர் விரும்பும்... கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளங் குளிர...."
எனப்பாடுகிறது.

2

"தொகை மொழிகள் "

தொகை மொழிகள் ஆறுவகை என்கிறார்.

"வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே
வினையின் தொகையே பண்பின் தொகையே
உம்மைத் தொகையே அன்மொழித் தொகை
யென்று அவ்வா றென்ப தொகைமொழி நிலையே" (412)

இ-ள்:

இங்கு 6 தொகை மொழிகளைச் சுட்டிய தொல்காப்பியர், தனியான நூற்பாக்கள் மூலமாகவும் விளக்கியுள்ளார்.

தொகை = தொக்கி நிற்பது தொகையாம். உருபு தோன்றா நின்று பொருளுணர்த்துவது.

- வேற்றுமைத் தொகை, அவ்வேற்றுமை உருபு தொடர்பொருளுணர்த்தி நிற்கும்.

எ-டு:

முதலாம் வேற்றுமைக்கு உருபு இல்லை என்பதால், அது தொகா.

ஆக 2 - 7 வரையான வேற்றுமை உருபுகள் தொக்கி நிற்கும்.

2 ஆம் வேற்றுமை -

நிலம் கடந்தான். இது தொகை, இதை விரிக்க,

நிலத்தைக் கடந்தான் என வரும்.

3 ஆம் வேற்றுமை -

இராமன் மூவர் - இது தொகை. இதை விரிக்க,

இராமனொடு மூவர்

4 ஆம் வேற்றுமை -

கரும்பு வேலி - இது தொகை, இதை விரிக்க,

கரும்புக்கு வேலி.

5 ஆம் வேற்றுமைத் தொகை--

மலைவீழருவி - இது தொகை, விரிக்க,
மலையின் வீழருவி.

6 ஆம் வேற்றுமை--

வள்ளுவன் குறள்- இது தொகை, விரிக்க,
வள்ளுவனது குறள்.

7 ஆம் வேற்றுமைத் தொகை--

தைப்பூசம் - இது தொகை, விரிக்க, தைக்கண் பூசம்.

ஆக,

சொற்களிடையே வேற்றுமை உருபுகள் மறைந்து நின்று வேற்றுமைப் பொருளை உணர்த்துவது 'வேற்றுமைத் தொகை'.

வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்பது 'வேற்றுமை தொடர்'
தொக்க நிற்பது தொகைநிலை, வெளிப்பட்டு நிற்பது தொகாநிலை
என்பதும் வழக்காம். விரிந்த நிலை

3

உவமத்தொகை:

உவமைத்தொகை எனினும் சரி.

"உவமத் தொகையே உவம இயல" (414)

இ-ள்:

உவமத் தொகையானது உவமவுருபு தொடர்ப் பொருள் போலப் பொருளுணர்த்தும்

எ-டு:

புலி மறவன் -- இது உவமத் தொகை.

புலியன்ன மறவன் -- இது உவம உருபுத் தொடர்.

மயின் மாதர் -- இது உவமத் தொகை.

மயிலொத்த மாதர் -- இது உவமவுருபுத் தொடர். இங்கு வரும் உவமவுருபுகள் 'இடைச் சொற்கள்' எனவுணர்க.

உவமவுருபுகளாவன:

போல, போன்ற, போலும், ஒப்ப, புரைய, மான, கடுப்ப, உறழ, அன்ன, இன்ன, ஒத்த எனப் பற்பல.

ஆக ஓர் உவமத் தொடரில் உவமானம், உவமேயம், உவமவுருபு என்பன அடங்கும்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்..."

"பச்சை மாமலை போல்மேனி, பவளவாய் கமலச் செங்கண் ..."

4. 'வினைத்தொகை'

"வினையின் தொகுதி காலத் தியலும்" (415)

இ-ள்:

வினைத் தொகையானது காலத்தின்கண் நிகழும் எ-று

வினையை உணர்த்தும் இத் தொகையானது மூன்று காலத்திற்கும் வரும். இங்கு வினையின் காலம் மறைந்து நின்றதால் 'வினைத் தொகை' ஆனது

எ-டு: கொல்யானை, ஆடரங்கு, அரிவாள், சுடுசோறு எனப்பல. இங்கு வினையும் பெயரும் இணைந்து வந்தமை நோக்குக. வினைத் தொகையைப் பிரித்துப் பொருள் கொள்ளலாகாது.

"ஆராத இன்பம் அருளும் மலை போற்றி..." (திருவாசகம்)

"இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய .."

"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க ..."

"செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திரு நீலகண்டம் " (சம்பந்தர்)

5 பண்புத்தொகை:

"வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையி னென்று
அன்ன பிறவும் அதன்குணம் நுதலி
இன்னது இதுவென வருஉம் இயற்கை
என்ன கிளவியும் பண்பின் தொகையே " (416)

இ-ள்:

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும், அவை போல்வன பிறவுமாகிய குணத்தை நுதலி, பின் தொக்கவழிக் குணச் சொற் குணமுடையதனை உணர்த்துவதனால், இன்னது இதுவென ஒன்றனை ஒன்று விசேடித்து, இரு சொல்லும் ஒரு பொருளின் மேல் வரும் இயல்பையுடைய எல்லாத் தொகைச் சொல்லும் பண்புத் தொகையாம் எ-று

பண்புத் தொகையும் வினைத்தொகை போலப் பிரிபடாவாம்.

எ-டு:

வண்ணப் பண்புத் தொகை - கருங்குதிரை

வடிவுப் பண்புத்தொகை - வட்டப்பலகை

அளவுப் பண்புத்தொகை - நெடுங்கோல்

சுவைப் பண்புத்தொகை - தீங்கரும்பு

- இவ்வகுப்பு நிறைவு --

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு - 32 , 01-07-2026

தொல் : சொல்: இயல் - 9, எச்சவியல்

ஐயம் தெளிதல்